[28th March 1969

உடையார் பாளையம் தாலுகா.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு (திரு. என். ஆர். தியாகராஜன் சார்பில்) : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) உடையார்பாளையம் தாலுகாவைக் கலைத்துவிட்டதை ஆட்சேபித்து பள்ளி மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்தனரா ?

(இ) அந்த தாலுகா எந்த தாலுகாவுடன் இணைக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் உடையார்பாளையம் வட்டத்தில், உடையார் பாளையம் முதன்மை வட்டமும் அரியலூர் துணை வட்டமும் சேர்ந்துள்ளன. உடையார்பாளையம் முதன்மை வட்டத்திற்குத் தலைமை யிடம் ஜெயங்கொண்டமாகும். அரியலூர் துணை வட்டத்திற்குத் தலைமை யிடம் அரியலூராகும். 1—11—67 முதல் (ரயத்துவாரி நிலவரி ஏற்பாடு செயலுக்குக் கொண்டுவரப்பட்டதன்மேல்) ரயத்துவாரி கிராமங்களாக எடுத்துக்கொள்ளப்பட்ட, உடையார்பாளையம் வட்டம் முழுவதிலும் பரவியிருந்த 54 தொகுதிக் கிராமங்கள் அரியலூர் துணை வட்டத்துடன் இணைக்கப்பட்டு, அது ஒரு புதிய வட்டமாக அமைக்கப்பட்டது. இந்தப் புதிய வட்டத்தின் தலைமையிடம் அரியலூர். உடையார்பாளையம் வட்டத்தின் எஞ்சிய பகுதி ஜெயங்கொண்டம் வட்டமாக அமைக்கப்பட்டது. இதன் தலைமையிடம் ஜெயங்கொண்டம். இதனையடுத்து அரசு ஜெயங்கொண்டம் வட்டத்திற்கு உடையார்பாளையம் வட்டமென்று மீண்டும் பெயரிடுவதன் மூலம் முதற்கண் இருந்த உடையார்பாளையம் வட்டம் அதே பெயரில் வைத்துக் கொள்ளப்படுமென்றும், ஆனால் அந்த வட்டத்திற்கு ஜெயங் கொண்டம் முன்போலவே வட்டத் தலைமையிடமாகத் தொடர்ந்து இருந்து வருமென்றும் ஆணையிட்டது.

Chief Minister's Relief Fund.

* 263 *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the amount at credit in Chief Minister's Relief Fund in the year 1967-68;

(*b*) the expenditure incurred during the financial year 1967-68, and

(*c*) the details thereof?

முதலமைச்சர் நிதி.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு (திரு. என். ஆர். தியாகராஜன் சார்பில்) : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1967–68-ல் முதலமைச்சர் மாநில உதவி நிதியென எவ்வளவு (**Chief Minister's Relief Fund**) நிதி உள்ளது ?

(இ) 1967–68-ஆம் நிதி ஆண்டில், அதில் செலவானது எவ்வளவு ?

(உ) அவற்றின் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) 1967–68-ஆம் ஆண்டில் (31—3—1968 அன்றுவரை) இந்நிதியில் இருந்த தொகை ரூபாய் 3,94,437-76 ஆகும்.

28th March 1969]

(இ) 1967–68-ம் ஆண்டில் செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 2,10,360·0 ஆகும்.

(உ) 1967–68-ம் ஆண்டில் செலவழிக்கப்பட்ட தொகை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

	ரூ.	பை
(1) திரு மன்னு கவுண்டரின் விதவைக்கு வடார்க்காடு மாவட்டம், அல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் மூலமாகக் கொடுக்கப்பட்ட தொகை.	100	00
(2) சென்னை மாநகர தீ விபத்துத் துயர் தணிப்பு நிதிக்குக் கொடுத்தது.	10,000	00
(3) சர்தார் படேல் ஜயந்தி விழாவை முன்னிட்டு, புதுடில்லி குடிமக்கள் மன்றத்திற்குக் கொடுக்கப்பட்ட தொகை.	250	00
(4) நொடித்துப்போன ஆலைகளில் வேலையிழந்த தொழிலாளர்களின் துயர்த்தணிப்பிற்காக கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கொடுக்கப்பட்ட தொகை.	2,00,000	00
(5) காயமுற்ற முன்னாள் படைவீரர் செல்லப்பன் நாயருக்குக் கொடுக்கப்பட்ட தொகை.	10.00	
	2,10,360	00

Criminal Procedure Code.

* 275 *Q.*—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to repeal section 109 of the Criminal Procedure Code or to drop all proceedings under that section; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ)—(இ) குற்றவியல் நடைமுறை சட்டக் கோவையின் 109(பி) பிரிவை ரத்து செய்வது குறித்த செயற் குறிப்பை அரசு ஆய்வு செய்து வருகிறது.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : தலைவர் அவர்களே, குற்ற இயல் நடைமுறை சட்டக் கோவை என்பது ஆங்கிலத்தில் **Criminal Procedure Code** என்று சொல்லப்படுகிறதே அதற்குத் தமிழ் ஆக்கமா என்பதைத் தெளிவுபடுத்தக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆமாம்.

THIRU D. SANTOSHAM : When the Government are examining the position, will they give interim instructions to the Police not to resort to this *prima facie* obnoxious provision till the order is passed?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 55–வது பிரிவும் 109-வது பிரிவும் ஒன்றுக்கொன்று தொடர்பு உள்ளது. எல்லாவற்றையும் நீக்க அரசாங்கம் கருதவில்லை. எ-பிரிவில் குற்றம் செய்வதற்கு ஏற்பாடு